உ
சிவமயம்



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு,

கொக்குவிலைச் சேர்ந்த

உயர் சைவ வேளாண் குடியினராகிய

# அமரர் முருகேசு இராசதுரை

( இளைப்பாறிய சுகாதார பரிசோதகர் )

அவர்களின்

# நினைவு மலர்

22-08-1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் முருகேசு இராசதுரை அவர்கள்

தோற்றம்: **1931-06-08**

மறைவு: **1998-07-23**

## திதி வெண்பா

ஆண்டுவெகு தானியத்தின் ஆடியிரு பத்தீரில்
வேண்டுபுதன் சதுர்த்தசித் தீதிநாளில — ஆண்டவனின்
சிவபதத்தைச் சேர்ந்தனரே சீரண்ணல் இராசதுரை
தவநிறைந்த கொக்குவிலூர் வேள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பஞ்சபுராணம்

## தேவாரம்

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற் றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியுந் தொழிலர்பா னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே.

## திருவாசகம்

இன்றெனக் கருளியிருள் கடிந்துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைத்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந்தொன்றாய்
திருப் பெருந்துறையுறை சிவனே
ஒன்றுநீயல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
வம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
 பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
 மன்னிய தில்லைதன்னு
ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
 பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
 வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
 லுன்னை யென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான்
 மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் அடியின்கீ
 ழிருக்க வென்றார்.

## திருப்புகழ்

கருப்பத் தூறிப் பிறவாதே
 கனக்கப் பாடுற் — றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
 சிறக்கப் பாலித் — தருவாயே
பரப்பற் றாருக் குரியோனே
 பரத்தப் பாலுக் — கனியோனே
 திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் — பெருமானே.

## வாழ்த்து

துய்யதோர் மறைகளாலுந் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யப் பேரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்புகீண்ட வேற்படை வாழ்க வன்னான்
பொய்யில் சீரடியார் வாழ்க வாழ்கவிப் புவனமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம்நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் — கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்த
சஷ்டி கவசந் தனை.

### குறள் — வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையநடஞ் செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவேன் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக

இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹ நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுடிகு டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க.
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ னிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைக டின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா க்ஷதரும்

அடியேனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்பச் சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்ப்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனையடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினின் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியுங் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுட னிறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைக்ஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப்பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருதிரு மருகா அமரா பதியை
காத்துத் தேவர் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனே

இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பாலகு மாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின் மாமலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனை
பாடினே னாடினேன் பரவசமாக
ஆடினே னாடினேன் ஆவினன் குடிவாழ்
நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புட னிரக்ஷி அன்னமும் சொன்னமும்

மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க வென் வறுமைக ணீங்க

எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்தாய்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய

அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்

விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த

குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கந்த சஷ்டி கவசம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காமாட்சி திருப்பதிகம்

சுந்தரி சவுந்தரி துரந்தரி நிரந்தரி
சோதியாய் நின்ற உமையே
சுக்கிரவாரம் தனில் உனைக் கண்டு
தரிசித்தவர்கள் துயரத்தை மாற்றிடுவாய்
சித்தம் தனில் உன்பதம் தனையே
தொழுதவர்கள் துயரத்தை மாற்றிடுவாய்
ஜெகமெலாம் உன்மாயை புகழ் என்னாலாமோ,
சிறிய கடன் உண்ணுதம்மா
சிவசிவ மகேஸ்வரி பரயனிட ஈஸ்வரி
சிரோன்மணி மனோன் மணியும் நீ
அந்தரி துரந்தரி புரந்தரி, அனாத ரட்சகி நீயே
அழகான காஞ்சியில் புகளாக
வாழ்ந்திடும் அம்மைகாமாட்சி உமையே

பக்தியால் யான் உனை பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறன பெரு வாழ்வில்
முக்தியே சேர்வதற் கருள் வாயே
வித்தகா ஞான சத்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே.

அன்றே எனது ஆவியும் உடலும் உடமை எல்லாம்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட போது
கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ
எண்தோள் முக்கண்ணன் எம்மானே.
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமரர் திரு. முருகேசு இராசதுரை அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழமணித் திருநாட்டின் இணையற்ற எழில் கொழிக்கும் யாழ்ப் பாண நகரில் நிறைவான கொக்குவில் பதியிலே ஒரு பெரியார் வாழ்ந்தார். எல்லோராலும் போற்றப்பட்டு முருகேசப்பா என்று அன்போடு அழைக்கப்பட்டு, பலர் அவர் ஆதரவை நாடி நின்ற வேளையிலே அவருக்கும் அவர் மனைவி பாக்கியத்துக்கும் முதன் முதலில் இறைவன் 1931 ஆம் ஆண்டு ஆனி மாதம் 8 ஆம் நாள் கொடுத்த நன்முத்துத்தான் இராசதுரை ஐயா. அவருக்குத் துணை யாய் வந்துதித்தாள் தனலட்சுமி என்னும் தங்கை. ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆஸ்திக்கு ஒரு ஆணும் என்று பாங்குடனே வளர்த் தனர். தந்தையாரின் கட்டுப்பாட்டை மைந்தன் இறுதிவரை மறக்க வில்லை. பதினேழாம் வயதினிலே கொழும்பு சென்று C. W. E. யில் லிகிதராகக் கடமையாற்றினார். கணக்காளருக்குப் படிக்க அனுப்பிய மகன் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவியை ஏற்றார் என்றதும் கலங்கினார் தந்தை, இருந்தாலும் விதியை வெல்ல வல்லார் உண்டோ. சிறப்பாகக் கடமைதனைச் செய்தார். பப்பா எல்லா வகையிலும் பிள்ளைக்கேற்ற உயர்வான துணையென்று உல்லாச மோகினியைத் திருமணம் செய்து வைத்தார். அதன் பயனாய் வந்த செல்வங்கள் பிரேமலதா, யாழினி, பிரேமாநந். இறக்கும் வரை அவர்களுக்காய் உருகி நின்றார். விதியன்றோ பிரித்தது. அவர்கள் தங்கையைத் தனக்கென்று நம்பி வாழ்ந்தார். அவர்களையும் விதி பிரித்தது. இறுதிவரை தான் தனியன். தனிமை என்ற தாரக மந் திரத்தை உச்சரிப்பார். தாயிறந்தபோது "அம்மா என்னை அநாதை யாய் விட்டுவிட்டுச் செல்கிறீர்களே எங்கேயோ பண்டத்தரிப்பி லிருந்து வந்த ஒருத்திதான் எனக்குத் துணை" என்று கதறினார். 1993 ஆம் ஆண்டு தைமாதம் 29 ஆம் திகதி கண்தெரியாத அம்மாவை வைத்துக்கொண்டு கடமைக்குச் செல்லவேண்டிய நிலையில் மற்றவர் களிடம் பின் செல்லாத சுபாவம் கொண்டவர் கமலாதேவி எனும் ஓர் அநாதையை தனக்குத் துணையாக ஏற்றுக்கொண்டார். அன்றி லிருந்துதான் அவர் வாழ்வின் அர்த்தத்தை இறைவனின் அருளால் அணு அணுவாய் உணர்த்த அதன் முன்னே தான் வாழ்ந்த வாழ்க்கை வேறு என்று அடிக்கடி சொல்வார். கிட்டத்தட்ட 50 ஆண்டுகள் சுகாதாரப் பகுதிக்குத் தன் உண்மையான சேவையை ஆற்றினார். 1997 ஆம் ஆண்டு தை மாதம் வரை கடமையில் ஈடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார் "ஏனப்பா உழைக்கின்றீர்கள் ஆறு அடி மண்ணுக்காக காலையிலிருந்து மாலைவரை ஓடினானே ஒருவன். அவன் போல் தொழிலுக்காக உங்கள் உயிரை உரமாக இடப்போகிறீர்களா" என்று வலுக்கட்டாயமாகத்தான் கடமையிலிருந்து மனைவியால் நிறுத்தப்பட்டார். அதன் பின்னர் கோவிலைக் கண்டார். நண்பர்களைக் கண்டார் உறவினர்களைக் கண்டார். வைபவங்களைச் சிறப்பித்தார். வாழ்வு அர்த்தமுள்ளதாக இருந்தது. இன்று இருந்தால் பொறுக்காது என்று கண்ட இறைவனும் 1998 ஆம் ஆண்டு ஆடி மாதம், "நாளை எழுந்து பப்பாவுக்காக ஆடி அமாவாசை விரதம் பிடிப்போம்" என்றவரை உறக்கத்தால் எழும்பவிடவில்லை 23 ஆம் திகதி விடியுமுன்னே நடு இரவிலே துடிதுடிக்க வைத்துப் பறித்துச் சென்றார். விதைத்தவர் அறுவடை செய்ய வந்தால் மனித புழுக்கள் என்ன செய்ய முடியும்? நல்லவரை அறுவடை செய்து விட்டார்.

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

— திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத் தெய்வத்தின் பாதாரவிந்தங்களுக்கு அர்ப்பணிக்கின்றேன்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்று சொன்ன வள்ளுவனோ வையமெலாம் புகழ் பரப்பி வாழ்கின்றான். அதற்கிணங்க வாழ்ந்த என் அவரோ என் உள்ளத்தே புகழ் மணக்க வாழ்கிறார். அன்றோர் நாள் பண்டத்த ரிப்பினிலே மகராஜியின் உரை நடுவிலே ஒருவர் "எல்லோர்க்கும் கல் வெட்டுப் பாடுகின்றார். பயனென்ன? வாழ்ந்தாரா அவ்வழியே?" என்று கேட்டார். ஆனாலும் வாழ்ந்திருந்தார் ஒருவர். முன்வீட்டில் முன்பிருந்தார். இன்றில்லை. வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் தான். அவர் வேறுயாருமில்லை என்பேரன் குமரேசு ஓவசியர்தான். அதன் பின்னே என்வாழ்வில் ஒருவர் கண்டேன். அவர்தான் என் தந்தை மகராஜி கற்பிக்கின்ற எளிமைதன்னை என் வாழ்வில் நெறி யோடு இளமையிலே கற்பித்து மாண்டு விட்டார். அன்னாரை இழந்து நான் தவிக்கையிலே என் வாழ்வு இருளோ என்று குரல் கொடுத்தேன் இறைவனிடம். அவர் தந்த செலவமன்றோ என் தலைவர். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அன்பு இராசதுரை ஐயா நானுமநாதை நீயுமநாதை என்றிணைந்தோம. பூவைப்போல் வாடாமல் பார்த் திருந்த என் தலைவா கருகவிட்டுப் பொன்னுலகம் புகுந்ததன் மர்மமென்ன நிலையானபேரின்பம் நிலைக்க உம்மோடு நாம்இருவருமே மூழ்கி ஆனந்தம சொர்க்மதை இவ்வுலகில் அனுபவித்து உடம்போடு வாழவே வேண்டி நின்றேன ஏனையா எனக்கான அன்பு இதயமதை கவர்ந்துவிட்டீர்? எனக்கான இதயத்தை நான் போற்றத் தவறி னேனா? அணுஅணுவாய் ரசித்திருந்தேன் பொறுக்கவில்லையோ? ஓர் நாள் அதறகான விளக்கமும தந்திடுவீர். வந்ததுண்மை போவதுண்மை இடையிலே ஆத்மாவுக்காய் என்ன செய்தீர் என்று கேட்பீர். ஆத்மாவுக்காய் ஆத்மஞானம் பெறுமுன்னே ஏன் கவர்ந்தீர்? என்னு யிரை. இறைவா இதுதான என் கவலை. எல்லோரும் தன் நண்பர். எல் லோரும் தன் பிள்ளை எல்லோரும தன்னவர்தான் என்று வாழ்ந்தவர். அவர் என்னவர்தான் என்று பூரித்து இறுமாந்திருந்தேன். அன்ன வரைத்தன்னவராய் ஏன் கொண்டான். அந்த இறைவன் கடந்த காலக் கவலைகளை நிகழ்காலக் கவலைகளை என்னிடத்தில் கொட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பார் சமன் செய்து சீர் தூக்கும் கோலதனை அழகாகக் கையாண்டீர் உம்மிடத்தில் ஓர் தப்புமில்லை என்று தேற்றிடுவேன். கவலைகளைக் களைந்தெறிய மகராஜி ஞானமதை நல்கிடுவார். ஞானமதைப் பெற்றிடவே சென்றிடுவோம் டெல்கி என்று நாளதனை எதிர்பார்த்து நிற்கையிலே மாயமதாய் மறைந்து விட்டீர். என் தலைவர் இன்று செய்வதை நாளை என்று பிற்போடாதே என்ற மந்திரத்தைத் தவற விட்டேன். துடிக்கின்றேன் நீர்க்குமிழிபோல் நிலையில்லா வாழ்க்கை என்று தெரிந்தும் ஏமாந்து போனேன் நான்

இளமையிலே எதிர்பார்த்த ஆண்மை மிக்க அறிவு ஆற்றல் மிக்க தலைவனை என் பிற்கால வாழ்க்கையிலே பெற்றுக் கொண்டேன். எனை ஆள வந்து ஆண்டவர் தான் என் தலைவர் கடவுளை யாரரென்று காணாமல் அலையுமிந்த மாந்தருள்ளே என் கரம் தொட்ட நாள் முதலாய் அவரை அறியாமல் கடவுளுக்கே தொண்டனைத்தையும் செய்தார். இறைவன் முத்தியின்பம் கொடுத்திடவோ என்னை அவருடன் இணைத்து வைத்தார்.

கொடுமை மிக்க இவ்வுலகில் நடக்கப்போகும் கோரம் மிக்க தாண்டவத்தை மெல்லிதயம் கொண்ட என் தெய்வம் தாங்க மாட்டார் என்றோ நீயழைத்தாய் என் இறைவா?

பிரிவால் வாடும்
அப்பாவின் அன்புக்
குஞ்சு

தன்னைத் தன்னால் அறிந்திட வேண்டுமே
தானாய் எங்கும் செறிந்திடல் வேண்டுமே.

— சிவயோகசுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளத்தில் இடம் பிடித்த உயர்ந்த மனிதர்களுள் ஒருவர்

சீரான உடை அணிந்த நெடிதுயர்ந்த தோற்றம், அகன்ற நெற்றி அன்பும் இரக்கமும் நிறைந்த பார்வை என்றும் சிரிப்புத் தவழும் மலர்ந்த முகம், சோம்பி இராத சுறுசுறுப்பு இதுவே மூனா எனச் சுருக்கப் பெயரோடு நம்மிடையே உலவி வந்த ஸ்ரீமான் மு. இராசதுரை அவர்களாகும்.

நான் அவரைச் சிறுவயதிலிருந்தே நன்கு அறிந்தவன். நான் அவரிலும் வயதிற் சிறியவனாகிலும் விளையாட்டுத்துறை நம்மிரு வரையும் நண்பர்களாக்கியது. சிறுவயதிலிருந்தே "கிறிக்கெட்" உதைபந்தாட்டம் என்றால் இவருக்கும் அலாதிப்பிரியம். இவர் கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் தம் ஆரம்பக் கல்வியையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர்கல்வியையும் பெற்றவர். படிக்கும் காலத்தில் கல்லூரி உதைபந்தாட்ட அணியில் ஒரு உறுப்பினராக விளையாடியவர். அந்நாட்களில் விளையாட்டுப் பயிற்சிக்காக மைதானம் தேடி நீண்டதூரம் போவதுண்டு. இப்போது தொழில் நுட்பக் கல்லூரி இருக்கும் இடமே அன்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத் திடலாக இருந்தமையால் நாங்கள் அங்கு போய் பயிற்சிகள் செய்தபின் வீடுதிரும்புவதுண்டு. இவ்வாறு நம் நட்பு வளர்ந்தது. நான் யாழ் இந்துக் கல்லூரியில் சேர்ந்து படித்தேன். அவரும் சுகாதார உத்தியோகத்தராக பதவி பெற்றுக் கடமையாற்றினார். அவர் கடமை நிமித்தமாக மட்டக்களப்புக்கு மாற்றலாகியதும் நம் நட்பில் தேக்கம் ஏற்பட்டதாயினும் இவ்விடம் வந்தபின் மீண்டும் நெருக்கமாக தொடர்ந்தது.

தினமும் அதிகாலை இவரது இல்லம் தாண்டித்தான் நான் கடைக்குப்போவேன். அந்நேரம் இராசதுரை அவர்கள் வீட்டினுள் இருந்தபடியே என்னை இடைமறித்துக் குரல் கொடுப்பார் "இன்று கிறிக்கெற் நிலவரம் எப்படி ? என்ன புள்ளிவிபரம் (Score) எனக் கேட்பார் நானும் அவரும் அன்றைய கிறிக்கெற் விபரங்கள் பற்றிக் கலந்துரையாடியபின் கடைக்குப் போய்வருவேன். ஆனால் இன்று ......... அந்த நீண்ட நெடிய உருவம், பழகுவதற்கு இனிய நண்பர் உதவி செய்வதற்கு ஒரு சகோதரன் இன்று நம்மிடையே இல்லை என்ற பேருண்மையை நம்பமுடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்திவ் வுலகு ''

என்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க அவரும் நம்மை விட்டு இயற்கை எய்திவிட்டார். அவர் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர். யாவருடனும் இன்முகத்துடன் பழகும் அவரது இனிய சுபாவம் அவரது நண்பர்கள், அயலவர், உறவினர் மனங்களை என்றும் விட்டகலாது. அவரது ஆன்மா இறைவனின் பாதார விந்தங்களில் என்றும் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

நண்பன்

கொக்குவில் கிழக்கு, க. பூபாலசிங்கம்

நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.

— திருக்குறள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மறப்பதில்லை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே — நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே, அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

மனிதன் பிறக்கின்றான், மறைகின்றான். ஆனால் அவன் வாழ்க்கையில் ஆற்றிய பணிகளை, விட்டுச் சென்ற நினைவு அலைகளை யாவரும் மறக்கமுடியாது. "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அப்பரின் அருள்வாக்கு. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்" என்பது வள்ளுவரின் கட்டளை. இவற்றினை சிரமேற் கொண்டு நம்முடன் வாழ்ந்தவரே அமரர் முருகேசு இராசதுரை அவர்கள்.

எம்மோடு பழகிய காலத்தில் அலுவலகத்தை தம் சொந்த வீடாகவும், சக ஊழியர்களை தம் சொந்தக் குடும்பமாகவும் கருதி நடந்தவர். இவர் எல்லோர்க்கும் இனியர், உண்மை, நேர்மை, கருணை என்பவற்றின் பிறப்பிடம். கடமை வீரர் இத்தகு உயர் பண்பு வாய்ந்த புனிதர் திடீரென அமரர் ஆனார் என்ற செய்தியை நாம் கேட்டபோது அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ்வுலகு"

என்ற தமிழ்மறை வாக்கை நிலைநிறுத்தப்போலும் ஆண்டவன் எங்கள் அன்பரை நொடிப்பொழுதில் தன்னிடம் அழைத்துக்கொண்டான். "உடல் அழியும்; உயிர் அழிவதில்லை. அது பிரமத்தின் விம்பம்" எனக் கீதை கூறும் உண்மையை உணரும்போது நாம் சிறிது மன அமைதி அடைகின்றோம். இராசதுரை என்ற பெயருக்கமைய குணக்குன்றாக விளங்கிய எங்கள் அன்பர் அணையா விளக்காக மாறிவிட்டார். அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் மனைவி மக்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபம்.

புகழுடம்பெடுத்த அன்பர் இராசதுரை என்றும் உள்ளத்துள் உள்ளார். எங்கள் நெஞ்சம் என்றும் மறப்பதில்லை

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வலிதென்மேற் பிரதேச சபை
பண்டத்தரிப்பு.

இங்ஙனம்
அன்பர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்

அமரர் திரு. முருகேசு இராசதுரை அவர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் தன் அயராத சேவையை ஆற்றியதோடு மட்டும் அல்லாது தனது இறுதிக் காலத்தில் தன்னை வழிநடத்திய குருவின் பாதையிலும் சேவை செய்ய முற்பட்டார்.

சற்குருவின் சற்சங்கம், சேவை இரண்டிலும் தன்னை இணைத்து பேரானந்தம் அடைந்தார். இவர் குருவின் சற்சங்க உரைகளை மிகவும் உன்னிப்பாக பக்தி சிரத்தையோடு இருந்து கேட்டு தெளிவு பெற்றவர். அமரர் திரு. முருகேசு இராசதுரை அவர்களின் மறைவு சற்சங்க அன்பர்கள் அனைவருக்கும் ஓர் பேரதிர்ச்சியை உண்டாக்கிற்று. இவர் குருவினுடைய பாடல்களை. இரசித்து கேட்பதிலும். பாடுவதிலும் வல்லவர் இவரின் விருப்பத்திற்குரிய பாடல் இது.

வாழ்க வாழ்க எங்கள் மகராஜ் வாழ்க
வாழ்வினின் அமைதி தந்த வள்ளல் மகான் வாழ்க
(வாழ்க)

மாநிலம் போற்றிடும் மாமன்னனே வாழ்க
மாந்தர்க் ஒளி அளித்த மாதவனே வாழ்க
(வாழ்க)

ஞான ஒளி அமிர்தம் நாத மந்திர சப்தம்
நான்கு முறைகளும் நலம் பெற அருளி
தியானத்தில் ஆழ்த்தி எம்மை லயிக்க வைக்க
தீன தயாளனே சற்குருநாதனே
(வாழ்க)

சற்குருவின் துணைநாடு என்றும்
சற்குருவின் துணை நாடு
சற்குருவின் துணை நாடு என்றும்
,, ,, ,, ,,
,, ,, ,, ,,
(சற்குருவின்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணம் செய்து நதியில் மூழ்கி
மலைமேல் ஏறி வருவீர் நாடி
அவர் பல இடங்கள் அலைந்து வந்தாலும்
மனமது அமைதி அடைவதில்லை. (சற்குருவின்)

உடலை வருத்தி புலனை அடக்கி
வரம்பல சென்று தவம் செய்தாலும்
இதயக் குரலை உணரா விடினும்
மனமது அமைதி அடைவதில்லை (சற்குருவின்)

குருவின் பொன்மொழி கேளாவிடினும்
ஞானம் இல்லை முயன்றாலும்
குருவைத் தேடு முழுமனதோடு
வாழ்க்கைக் கடலினைக் கடப்பாயே (சற்குருவின்)

**எழுமின் விழிமின் எண்ணிய கருமம் கைகூடும்**
**வரை உழைமின் உழைமின்.**

—சுவாமி விவேகாநந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி நவிலல்

அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளிலும் அதன் பின் நடைபெற்ற ஒவ்வொரு கருமங்களிலும் தொண்டாற்றிய, இன்று நடைபெறும் ஒவ்வொரு கிரியைகளிலும் கலந்து கொண்டு பேருதவி செய்த சகோதர சகோதரிகள், மைத்துன மைத்துனிகள். மக்கள், மருமக்கள், பேரன்மார். உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் இம் மலரினை அச்சிட்டுத் தந்த பதிப்பகத்தாருக்கும் மனமார்ந்த உளம் கனிந்த நன்றியைக் கூறிநிற்கும்

**மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரி, பிள்ளைகள்.**

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
22-08-98

பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசதுரை எனும் இனிய பண்பாளனின் நினைவலைகள்

நீர் வளமும் நிலவளமும் சீர் செறிந்து விளங்கும் வலி மேற்கு, வலி தென்மேற்கு பகுதிகளில் 6 ஆண்டுகள் கடமை யாற்றிய சுகாதாரப் பரிசோதகர் அமரர் இராசதுரை அவர் களை அறியாதார் சிலரே. அன்னார்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற திருக்குறளுக்கு இணங்க மனிதருள் மாணிக்கமாக வாழ்ந்தவர் – கடமைப் பணியை ஈகைச் சிறப்புடன் தொண்டு பணியாக செயலாற்றிய கர்ம வீரராக திகழ்ந்தார். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந் தார் இறைவனடி சேராதார்" என்றவாறு இறைவனடி சேர்க் கும் பாலமாக கடமையெனும் குருவை போற்றி மதித்த பண்பாளர்.

பிறர் என்று பாராது எவர் இன்னல் பட்டிருந்தாலும் அதனைக் களைய தம்மால் ஆனதை, தமக்கே உரித்தான சீரிய புன்னகையுடன் செய்யத் தவறியதில்லை - சுகாதார பரிசோதகராக இவர் தமது சேவையில் நேர்மை, நிதானம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பண்புகளை கடைசி வரை கடைப்பிடித்த பெருமகனார் ஆழ்ந்த தெய்வ நம்பிக் கையுடைய இவர் எடுத்த காரியத்தை தொடுத்து முடிக்கும் வைராக்கியமும் தீரமும் உள்ளவராக மிளிர்ந்துள்ளார்.

ஆடல், பாடல், நடிப்பு, அபிநயம் போன்ற துறைகளி லும் சிறந்து விளக்கிய இவர், எமது காரியாலயத்தில் ஆண்டு தோறும் நடைபெறும் "வருட முடிவுக் கொண்டாட்ட விழா" வில் தன் சீரிய நடிப்பு திறனால், கதாநாயகனாக திகழ்ந் தவர்.

அன்னாரின் மறைவு எமது ஓர் பேரிழப்பாகும்.

'அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக'

சங்கானை.
10-08.1998

சுகாதார பணிமனை ஊழியர்கள்,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org